தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre Homebush Inc.
PO Box 4032, Homebush, NSW 2140.

## பேச்சுப் போட்டி 2024 ஆண்டு 7

அனைவருக்கும் வணக்கம்

# தைப்பொங்கல் அது தமிழ்ப் பொங்கல்

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள் எம் மூதாதையர்கள். ஆற்றங்கரையில் பயிர்வளத்தைக் கண்டார்கள். நாடோடி வாழ்க்கை நின்றது. கிராமிய வாழ்க்கை நிலைத்தது. காற்று, மழை, மிருகங்களுக்குப் பயந்த காலம் மலையேறியது. எருதுகள் உழுதன. பயிர்கள் மழையில் வளர்ந்தன. விளைந்து பயன் கொடுத்தன. ஓய்வு கிடைத்தது, ஒளிர்ந்தது ஞாலம்.

இத்தனைக்கும் காரணம் இருள் அகற்றி ஒளி கொடுத்த சூரியனே என்று

“ஞாயிறு போற்றுதும் - ஞாயிறு போற்றுதும்

வான்மழை போற்றுதும் - வான்மழை போற்றுதும்”

என நன்றி உணர்வு பொங்கிப் பொங்கலாய்ப் பொலிந்தது.

வயலில் விளைந்த புது நெல் அரிசியிலே பொங்கலைப் பொங்கினார்கள். தோட்டத்தில் வளர்ந்த கரும்பும் இஞ்சியும் மஞ்சளும் கனிகளும் சேர்த்து இயற்கைக்குப் படைத்து மகிழ்ந்தார்கள். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தை முதல் நாளிலே தைப் பொங்கல் திருநாள் கால்கோளிட்டது.

எங்களின் இனிய தைப்பொங்கல் தினம் உலகெங்கும் வாழும் தமிழர்களால் கொண்டாடப்படுகிறது. சில மேற்கத்தய அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட நாளாக விளங்குகிறது. உழவர் திருநாள் புவி முழுதுக்கும் ஒரு செய்தி கொடுக்கிறது. ஆம்! உழவே உலகுக்கு ஆதாரம், பயிர்த் தொழிலால் தான் எம் பசி தணிக்கப்படுகிறது, வாழ்க்கை நடக்கின்றது.

பொங்கலைப் போற்றுவோம்! பகிர்ந்துண்டு மகிழ்வோம்!

நன்றி

வணக்கம்